செ.வெ.எண்:10 நாள்: 07.01.2021

<u>கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் **SSC – CGL** - ஒருங்கிணைந்த பட்டப்படிப்பளவில் **-2021** முதனிலை **(Tier-I)** தேர்வுக்கான இலவச இணையவழி பயிற்சி வகுப்புகள் தொடக்கம்</u> - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சு.மலர்விழி இ.ஆ.ப., அவர்கள் தகவல்

கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டம் சார்பாக பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் அறிவித்துள்ள பட்டப்படிப்பு அளவில் **(SSC-CGL-2021)** நடத்தப்படும் முதனிலை **(Tier-I)** தேர்வு 29.05.2021 முதல் 07.06.2021 வரை நடைபெறவுள்ளது. இத்தேர்விற்கு விண்ணப்பிக்க கடைசிநாள் 31.01.2021 ஆகும். இத்தேர்விக்கு இலவச இணையவழி பயிற்சி வகுப்புகள் வருகின்ற 08.01.2021 முதல் இணையவழி செயலி மூலமாக கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் துவங்கப்படவுள்ளது. இப்பயிற்சியின் போது இலவசமாக பாடக்குறிப்புகள், முந்தைய ஆண்டு மாதிரி வினாத்தாட்கள் வழங்கப்பட்டு மாதிரித்தேர்வுகளும் நடத்தப்படும்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விருப்பமுள்ள போட்டித்தேர்வர்கள் தங்களின் விவரங்களை 9360557145 / 04324-223555 என்ற தொலைபேசி வாயிலாக அல்லது கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை நேரடியாக தொடர்பு கொண்டு, தங்களுடைய வாட்ஸ்அப் கைபேசி எண்ணை பதிவு செய்து கொள்ளுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.சு.மலர்விழி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்